# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ம் நாள் செவ்வாய்கிழமை ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| **28.02.2017** | **1)**1)இம்மாநகராட்சி பொறியர் பிரிவு மற்றும் பொது பிரிவில் பணிபுரிகின்ற கடைநிலை பணியாளர்கள், ஓட்டுநர்கள், துலக்குநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2016ம் ஆண்டுக்கான சீருடை மற்றும் தையற்கூலி வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம், துணி வகைகளை தமிழ்நாடு காதி கிராப்ட் வாரியத்தில் கொள்முதல் செய்வதற்கும் மற்றும் தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினமாக தொகை ரூ 5.00 (ஐந்து இலட்சம் மட்டும்) இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ2/283/17 | 2)அனுமதிக்கப்பட்டது |
| | **2)** இம்மாநகராட்சியில் கட்டிட உரிமைக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் மாமன்ற தீர்மான எண். 43 நாள் 30.03.2012 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமம் மற்றும் இதரக் கட்டணங்களில் விடுபட்ட இனங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி (Schedule of Rates) கட்டணங்களை நிர்ணயிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. | 3)ஒப்புதல் அளிக்கப்படுகிறது |

| வ. எண் | சட்டப் பிரிவு | விபரம் | பழைய கட்டணம் ரூ. பை | திருத்திய மைக்கப் பட்ட கட்டணம் ரூ. | யூனிட் | அனுமதி காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 272 | சுவர்களும், மறைப்புகளும் கட்ட 8 அடி உயரத்திற்கு மேற்படாதது | –– | 200/– | 30மீ நீளத்திற்கு | 2 வருடம் |
| 2 | 286 | நிலுவையிலுள்ள கட்டிடத்தை இடிக்க அனுமதி வழங்க | ––– | 100/– | 1 சதுர மீட்டருக்கு | 6 மாதம் |
| 3 | | மாநகராட்சி சாலைகள் / மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் விளம்பரப்பலகை வைக்க இட வாடகை | 375/– | 1000/– | 1 ச.மீ.அதன் பாகம் பேருந்து நிலையத்தில் | 1 வருடம் |
| | | | 350/– | 500/– | இதர பகுதிகள் | 1வருடம் |
| | | | –– | 500/– | மின் கம்பங்கள் 0.75 X மீ 0.45மீ | 1 வருடம் |
| 4 | | விளம்பர வரி–நகரில் மாவட்ட ஆட்சியர் அனுமதியின் பேரில் வைக்கப்படும் விளம்பரங் களுக்கான வரி நிர்ணயம் செய்தல் (அரசாணை எண்.47 நாள் 26.06.2003) | ––– | 500/– | ––– | 6 மாதம் |

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் செய்யலாம். எப்1/21218/05

| | | |
|---|---|---|
| | **3)** தூத்துக்குடி மாநகராட்சியில் பராமரிக்கப்படும் கட்டிடங்களின் மேற்கூரையில் சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்திட சாத்திய கூறுகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் வாய்ப்புள்ள கட்டிடங்கள் மீது சூரிய மின்சக்தி ஆலைகள் மின் உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்த அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>இதன்படி உரிய கலந்தாலோசகரை நியமித்து ஒப்புதல் படிவம் தயாரித்திடவும் மற்றும் ஒப்பந்த செயல்முறை மேலாண்மை செய்திட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு உரிய நிர்வாக அனுமதி பெறவேண்டியது அவசியமாகிறது.<br><br>மேற்படி சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 100 விழுக்காடு முதலீடு செய்திடவும், இந்த முதலீட்டு தொகையினை, மின் உற்பத்தி மூலம் ஈட்டிட தேவைப்படும் காலம் வரை சூரிய மின்சக்தி ஆலைகளை இயக்கி பராமரித்தல் உட்பட அனைத்து தொடர்பு வேலைகளையும் செய்திடவும் முன்வரும் புதுப்பிப்பு மின் திறன் சேமிப்பு நிறுவனங்கள் / முதலீட்டாளர்கள் / ஒப்பந்தப்புள்ளி போட்டியாளர்களை வரவேற்று பணி செயலாக்கம் செய்திட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br><br>ந.க.எண். 829/2013/இ3 | 4)ஒப்புதல் அளிக்கப்படுகிறது. |
| | **4.** சென்னை, கலை பண்பாட்டு இயக்கத்தின் ஆணையர் பொறுப்பு அவர்களின் 10.02.2017ம் தேதிய ந.க.0523/ஊ1/2016–1 எண்ணிட்ட கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான குருஸ்புரம் பகுதியில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடத்தை தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப்பள்ளியை சாா்ந்த அலுவலக பயன்பாட்டிற்காக மாநகராட்சியால் நிா்ணயம் செய்யப்படும் மாத வாடகைக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சமுதாய நலக்கூடம், பொதுப்பணித்துறை நிர்ணயிக்கும் வாடகைக்கு மேற்படி துறையினருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்றிப்பு** மாமன்றம் அங்கீகரிக்கலாம்<br><br>அ16/00524/2017 | 5)அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 5) 29.03.2016ல் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள கட்டிட கழிவுகள் மேலாண்மை விதிகள் – 2016 மன்றத்தின் பார்வைக்கு,<br>இந்த விதிகளின் அடிப்படையில் மாநில அரசால் 12 மாத காலத்திற்குள் பொதுவான கொள்கை முடிவுகள் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008, பிரிவு 432(31)ல் மாநகரை சுத்தமாக மற்றும் பாதுகாப்பான வகையில் மேலாண்மை செய்வதற்கு துணை விதிகள் ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மத்திய அரசின், கட்டிட கழிவுகள் மேலாண்மை விதிகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நடைமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளலாம்.<br><br>1. நமது மாநகரை பொறுத்தவரையில் கட்டிட கட்டுமானப்பணிகள் ஆண்டுக்கு சுமார் 1200 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. இம்மாநகராட்சி 90.66 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உடையது. மாநகரின் மையப்பகுதியில் பழமையான கட்டிடங்கள் உள்ளதால் அத்தகைய கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு வாய்ப்புள்ளதால் கட்டிட கழிவுகள் உற்பத்தியாகும். மேலும் மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகள் வளர்ந்து வரும் நிலையில் கட்டிட கழிவுகள் உற்பத்தியாகும்.<br>2. மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் கட்டிடக் கழிவுகளை கொண்டு சேர்க்கலாம். தருவைக்குளம் உரக்கிடங்கு 500 ஏக்கர், தனசேகரன் நகர் வடக்கு மண்டலம் 2.5 ஏக்கர், புல் தோட்டம் ஜார்ஜ் ரோடு கிழக்கு மண்டலம், சிதம்பரநகர் 2வது தெரு மேற்கு மண்டலம், மற்றும் ஜேஎஸ்நகர் ரோடு (மேற்கு பக்கம்) தெற்கு மண்டலம்.<br><br>**கட்டிடம் இடிக்க(ம) கட்டிட கழிவுகளை கையாளுதல் விதிகள்–**<br>1. கட்டிட கழிவுகளை உற்பத்தி செய்வோர் ஒவ்வொருவரும் கட்டிட கழிவுகளை சேகரித்தல், கான்கிரீட், மணல் மற்றும் இதர பொருட்களாக பிரித்தல், சேமித்தல் மற்றும் அகற்றுவதற்கு முழு பொறுப்பாவார்கள்.<br>2. கட்டிட கழிவுகளை மற்ற கழிவுகளுடன் கலக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது கட்டிட கழிவுகளை உற்பத்தி செய்வோரின் கடமையாகும்.<br>3. கட்டிட கழிவுகளை உற்பத்தி செய்வோர்கள் நாள் ஒன்றுக்கு 20 டன்னுக்கு மேலாக அல்லது கட்டிடத்தின் கழிவு மாதம் ஒன்றுக்கு 300 டன்னுக்கு மேலாக இருந்தாலோ கழிவுகளை கான்கிரீட், மணல், கம்பி, செங்கல் மற்றும் கலவை, மரம் மற்றும் பிளாஸ்டிக் என நான்கு வகைகளாக பிரிக்க | **6)** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வேண்டும். மேலும் கழிவுகளை மேலாண்மை செய்யும் திட்டத்தை தயாரித்து கட்டிட இடிக்கும் பணி துவங்கும் முன்பாக மாநகராட்சிக்கு சமர்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.<br>4. கட்டிட கழிவுகளை கட்டிட கழிவு உற்பத்தியாளர்கள் தங்களது வளாகத்திற்குள்ளேயே வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.<br><br>கட்டிட கழிவுகளை உற்பத்தியாளர்கள் அதாவது கட்டிடத்தை இடிப்பவர்களும், கீழ்க்கண்ட உரிமையாணை கட்டணங்களை செலுத்தி மாநகராட்சியின் முன் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| 1 | கட்டிம் இடிப்பதற்கான உரிமக் கட்டணம் | ரூ. 100/— 1 சதுர மீட்டருக்கு | |
| 2 | கட்டிட கழிவுகளை மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் சேமித்து வைத்து தமது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொள்ள கட்டணம் | ரூ.150/— 1 கன மீட்டருக்கு | 1 வாரம் மட்டும் |
| 2 (அ) | கட்டிடக் கழிவுகளை மாநகராட்சியால் நியமிக்கப்படும் நபர்கள் / ஒப்பந்தகாரக்ள் வாயிலாக அகற்றி மாநகராட்சி குறிப்பிட்டுள்ள இடத்திற்கு கொண்டு செல்ல | ரூ.400/— 1 கன மீட்ருக்கு | |
| (ஆ) | மனுதாரரே மாநகராட்சி இடத்தில் கொண்டு வந்து வழங்க | ரூ.50/— கன மீட்ருக்கு | |
| 3 | சிறிய அளவிலான கட்டிடக் கழிவுகள் மாநகராட்சி வாயிலாக அகற்றிட | ரூ.250/— 1 மினி ஆட்டோ அளவிற்கு | |

மேற்கண்டவாறு உபவிதிகள் ஒப்புதலுக்கும் விளம்பரம் செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/6011/2005

| | | |
|---|---|---|
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிக்கு மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்த இருநூற்றி ஐம்பது தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு அனுமதியும், மேலும் இப்பணியினை இதற்கு முன்பு பார்த்து வந்த மெசர்ஸ் ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட் என்ற நிறுவனத்திடம் மேற்கொள்ள அனுமதியும், அதற்காகும் செலவுத்தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்2/11648/10 | 7)அனுமதிக்கப்படு கிறது |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் வழங்கும் தாமிரபரணி ஆற்றில் கடந்த மழைக்காலங்களில் போதிய மழை பெய்யாததால் நீரோட்டம் முற்றிலும் வறண்டு கடும் குடிநீர் தட்டுப்பாடு கடந்த 10.01.2017 முதல் ஏற்பட்டுள்ளது. இதனை போர்க்கால அடிப்படையில் சமாளிக்கும் பொருட்டு தனியாருக்கு சொந்தமான ஆழ்துளைக் குழாய் கிணற்றிலிருந்து தனியார் டேங்கர் லாரிகள் மூலம் எடுத்து வந்து நகர் இராஜாஜி பூங்கா நீரேற்று நிலைய வளாகத்திலுள்ள தரைமட்ட தொட்டியில் சேகரித்து மோட்டார்கள் மூலம் OHTகளுக்கு ஏற்றி பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த தனியார் லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்து வரப்படுவதை உடனுக்குள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தரைமட்ட தொட்டியில் நிரப்புவதற்கு ஏதுவாக இரண்டு 5 குதிரை திறன் மோனோ பிளாக் மோட்டார் பம்புகள் மற்றும் அதற்குரிய ஹோஸ் பைப்புகள் மற்றும் இதர உபகரணங்களை வாங்கி பொருத்தினால்தான் சமாளிக்க இயலும் நிலை ஏற்பட்டதால், குடிநீர் விநியோக அவசர அத்தியாவசியம் கருதி மேற்படி பணிகளை செய்து முடிக்கவும் அதற்கான செலவுத்தொகை ரூ 1.80 இலட்சத்தினையும் குடிநீர் விநியோகம் நிதி அல்லது SDRF நிதியிலிருந்து செலவு செய்யுவும் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 15ன் கீழ் மேற்கொண்டதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | 8 (1) மாமன்றம் பதிவு செய்கிறது,<br><br>2)ஒப்புதல் அளிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு</u><br><br>1) மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2)செலவினத்தை குடிநீர் விநியோகம் நிதி (அல்லது) SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>ந.க.எண்.751/17/இ3 | |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 அத்தியாயம் 15ன் கீழ் துணை விதிகள் ஏற்படுத்தியும், 2016 ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதி உட்பிரிவுகளின்படியும் திடக்கழிவு மேலாண்மையை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும், அதில் கூறப்பட்டுள்ளவாறு கழிவுகளை மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்தவும், நிர்வாகக்கட்டணங்களை (User Fee) உயர்த்தியும் மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பாதுகாப்புசட்டம் 1986 (29.08.1986) பிரிவு 3,6 மற்றும் 25ன் படியும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் சட்டம் 2016ன் படியும் வகுப்பு 15 ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டணம் மற்றும் பொறுப்புகள் அடங்கிய திடக்கழிவு மேலாண்மை திட்ட கட்டளை கொத்து ( Bye laws) தயார் செய்யப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க எண் 33180/2016/பி3 நாள் 02.01.2017 ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>அதன்பேரில் கீழ்க்கண்டவாறு நிர்வாக கட்டண விகிதங்கள், அபராத கட்டணங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடங்கிய கீழ்கண்ட துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br><br>1. தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலங்கள், வணிகவளாகங்கள் இன்ன பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துகளிலோ, கழிவு நீர்க்கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் | 9) i) அனுமதிக்கப்பட்டது<br><br>ii) அனுமதிக்கப்பட்டது<br><br>iii) அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | நீர்நிலைகளிலோ போடக் கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.<br>2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறமுள்ள கூடையிலும் சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.<br>3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை மாநகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாங்கப்படமாட்டாது.<br>4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் மாநகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். மாநகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.<br>5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் | | |

| | | | |
|---|---|---|---|
| | | கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி மாநகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.<br>6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. இந்திய அரசின் 1999 ஆம் ஆண்டின் மருத்துவ கழிவு நீர் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை மாநகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>7. தோட்டக் கழிவுகளை, உருவாக்கும் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் வைத்துக்கொண்டு பிரதிவாரம் வெள்ளிக்கிழமை மாநகராட்சி வாகனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். மாநகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும். சாலையோரங்களில் உள்ள மரக்கழிவுகளை பிற துறையினரால் அப்புறப்படுத்த வேண்டும். அப்புறப்படுத்தும்போது முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அதற்கான கட்டணத்தை அத்துறையினரே மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.<br>8. கட்டட இடிபாடுகளை கட்டட உரிமையாளர் ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக் கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது | |

| | | |
|---|---|---|
| | சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் மாநகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும். உபயோகிப்பாளர் கட்டணம் வரிசை எண் 5ல் குறிப்பிட்டுள்ளபடி சம்மந்தப்பட்ட நகரமைப்பு ஆய்வாளரால் கட்டிட உரிடக்கட்டணம் வசூல் செய்யப்படும் போது இதனையும் சேர்த்து வசூல் செய்யப்பட வேண்டும்.<br>9. மாநகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனை குற்றமாகும்.<br>10. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது வாகனம் மூலம் மாநகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் செலுத்தினால் மாநகராட்சி வாகனமே அவற்றை பெற்றுச் செல்லும்.<br>11. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக் கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது மாநகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய நிர்வாகச் கட்டணம் செலுத்தினால் மாநகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக்கொள்ளும். | |

| | | |
|---|---|---|
| | 12. அச்சகங்கள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை மாநகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.<br>13. தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை மாநகராட்சி பகுதியில் விடக்கூடாது. கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி அப்புறப்படுத்த வேண்டும்.<br>14. பாதசாரிகள் மற்றும் சாலை ஒரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் மாநகராட்சி சாலை ஒரங்களில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது<br>15. செப்டிக் டேங்க் கழிவுகளை, கழிவு நீர் வாய்க்கால்களிலோ, அல்லது தெருக்களிலோ கொட்டக் கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>16. மாநகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை நீக்கம் செய்வதற்கான நிர்வாக கட்டணங்களை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.<br>17. பொது இடங்களில் 100 நபர்களுக்கு மேல் கூடும் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் மூன்று நாட்களுக்கு முன்னரே மாநகராட்சிக்கு தெரியப்படுத்த வேண்டும். மாநகராட்சி தெரிவிக்கும் முறையில் நிகழ்ச்சியில் உண்டாகும் கழிவுகளை ஒப்படைக்க வேண்டும்.<br>18. 5000 சதுர மீட்டர் மற்றும் அதற்கு குறைவான பரப்பளவுள்ள குடியிருப்பு வளாகங்கள் மற்றும் நிறுவனங்களில் சேகரமாகும் மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மட்டுமே மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும். மக்கக்கூடிய கழிவுகளை தங்களது நிறுவனங்கள் உரிய முறையில் உரமாக்கிக்கொள்ள வேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| | 19. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.<br>20. தொடர் குற்றங்களுக்கு தினசரி ரூ.100/– வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்<br>21. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, மாநகராட்சியின் ஆணையாளருக்கு மாநகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br>22. திடக்கழிவு மேலாண்மை திட்டம் விதி 2016 பிரிவு (17) (2) ன்படி டின், கிளாஸ், பிளாஸ்டிக் கவர் இதர பொருள் தயாரிப்பாளர்கள் அல்லது டீசயனே டீறநேசள அறிமுகப்படுத்தும் பொருட்களிலிருந்து உருவாகும் கழிவுகள் மாநகராட்சி மூலம் மறுசுழற்சி அல்லது மறுசுழற்சியற்ற பொருள்களாக கொடுக்கும்போது தயாரிப்பாளர் அல்லது Brand Owner மாநகராட்சி தெரிவிக்கும் நாட்களுக்குள் (Collect Back the Packing Waste) எடுத்துக்கொள்ள வேண்டும்.<br>23. நிர்ணயிக்கப்படும் உபயோகிப்பாளர் கட்டணம் ஒவ்வொரு அரையாண்டிற்கும் சொத்துவரி வரிவிதிப்பு எண்ணுடன் இணைத்து தனிக்கணக்கின் கீழ் வருவாய் பிரிவின் மூலமும், அபராதக் கட்டணங்கள் பொது சுகாதாரப் பிரிவின் மூலமும் வசூல் செய்யப்பட வேண்டும்.<br>24. கட்டிட இடிபாட்டு கழிவுகள் நகரமைப்பு மற்றும் பொறியியர் பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு ஏற்புடைய தொகை | | |

| | | |
|---|---|---|
| | வசூல் செய்யப்பட வேண்டும்.<br>25. கட்டணம் ஒவ்வொரு அரையாண்டிற்கும் சொத்துவரி வரிவிதிப்பு எண்ணுடன் இணைத்து தனிக்கணக்கின் கீழ் வருவாய் பிரிவின் மூலமும், அபராதக் கட்டணங்கள் பொது சுகாதாரப் பிரிவின் மூலமும் வசூல் செய்யப்பட வேண்டும்.<br>26. கட்டிட இடிபாட்டு கழிவுகள் நகரமைப்பு மற்றும் பொறியியர் பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு ஏற்புடைய தொகை வசூல் செய்யப்பட வேண்டும். | |

**அட்டவணை–1**

**நிர்ணயம் செய்யப்பட்டுள்ள உபயோகிப்பாளர் கட்டணம்**

| வ.எண் | விவரம் | புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டது |
|---|---|---|
| 1 | திருமண மண்டபங்களில் சேகரமாகும் கழிவுகளை மாநகராட்சி லாரி மூலம் அப்புறப்படுத்த (ஒரு வருடத்திற்கு)<br>மண்டபம் – சிறியது<br>மண்டபம் – பெரியது | ரூ. 2000.00<br>ரூ. 10000.00 |
| 2 | உணவு விடுதிகள் சாப்பாடு வசதியுடன் கூடிய<br>1. உணவு விடுதி (ஒரு வருடத்திற்கு)<br>2. மெஸ் மற்றும் டிபன் ஸ்டால் (ஒரு வருடத்திற்கு) | ரூ.3000.00<br>ரூ.1500.00 |
| 3 | 1. மருத்துவமனை கழிவுகள், மருத்துவ கழிவுகள் நீங்கலாக படுக்கை வசதியுள்ள மருத்துவமனைக்கு மட்டும் (ஒரு வருடத்திற்கு)<br>அ) 5 படுக்கைகளுக்கு குறைவாக உள்ள மருத்துவமனைக்கு<br>ஆ) 5 படுக்கைகளுக்கு மேலாக உள்ள மருத்துவமனைக்கு | ரூ.750.00<br>ரூ.1500.00 |
| 4 | சாலையோர தற்காலிக கடைகள் மற்றும் இரவு நேர கடைகள் (ஒரு வருடத்திற்கு) | ரூ.500.00 |

| | | |
|---|---|---|
| 5 | கோழி மற்றும் மீன் கடைகளுக்கு (ஒரு வருடத்திற்கு) | ரூ.500.00 |
| 6 | பழைய பேப்பர் கடை கழிவுகள் அப்புறப்படுத்த (ஒரு வருடத்திற்கு) | ரூ.750.00 |
| 7 | செருப்பு உற்பத்தி செய்பவர்கள் ஏற்படுத்தும் கழிவுகளை அப்புறப்படுத்த (ஒரு வருடத்திற்கு) | ரூ.300.00 |
| 8 | பழச்சாறு கடைகள் மற்றும் பழமுதிர் நிலையங்கள் (ஒரு வருடத்திற்கு)<br>பெரியது<br>சிறியது | ரூ. 2000.00<br>ரூ. 1000.00 |

**குடியிருப்புகள்**

| வ.எண். | பொருள் | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| அ | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | அரையாண்டிற்கு | 60.00 |
| ஆ | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.501–1000 க்குள்) | அரையாண்டிற்கு | 120.00 |
| இ | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001–2000 க்குள்) | அரையாண்டிற்கு | 180.00 |
| ஈ | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்) | அரையாண்டிற்கு | 300.00 |

**நிறுவனம்**

| | | | |
|---|---|---|---|
| அ. | கிளினிக் | அரையாண்டிற்கு | 250.00 |
| ஆ. | மருத்துவமனைகள் | அரையாண்டிற்கு | 2000.00 |
| இ. | இதர அலுவலகங்கள் | அரையாண்டிற்கு | 1000.00 |
| ஈ | அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டிடங்கள் | அரையாண்டிற்கு | 3000,00 |

**வணிகம்**

| | | | |
|---|---|---|---|
| அ. | டீ ஸ்டால் / சிற்றுண்டி | அரையாண்டிற்கு | 250.00 |
| ஆ | நடமாடும் உணவகம் | அரையாண்டிற்கு | 250.00 |
| இ | வணிகவளாகம் | அரையாண்டிற்கு | 1500.00 |
| ஈ | வாகன பழுது நீக்கும் கடை | அரையாண்டிற்கு | 150.00 |
| உ | தேங்காய்/பூ/காய்கறிகள்வியாபாரம் | அரையாண்டிற்கு | 150.00 |

| | | | |
|---|---|---|---|
| ஊ | பலசரக்கு/ஸ்டேசனரி/மருந்தகம்/ ஜெராக்ஸ் கடைகள் | அரையாண்டிற்கு | 200.00 |

**மற்றவை**

| | | | |
|---|---|---|---|
| அ. | சினிமா தியேட்டர் | அரையாண்டிற்கு | 500.00 |
| ஆ | ஜவுளி கடைவியாபாரம்<br>பெரியது<br>சிறியது | அரையாண்டிற்கு | 1500.00<br>300.00 |
| இ | மரக்கழிவுகள் | அரையாண்டிற்கு | 250.00 |
| ஈ | தோட்டக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | 50.00 |
| உ | வீட்டுத் தோட்டக் கழிவுகள் | நிகழ்வு 1க்கு | 50.00 |
| ஊ | இதர இனங்கள் | நிகழ்வுக்கு தக்கவாறு | 300.00 |

| | | | |
|---|---|---|---|
| அ. | கட்டிட இடிமான பொருட்கள் அகற்றுதல் | லோடு ஒன்றுக்கு | 3000.00 |

இச்செயல்பாடுகள் அனைத்தும் 01–04–2017 முதல் அமுலுக்கு வருகிறது.

## அட்டவணை –2

மக்கும் மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படும் குப்பைகளை விளக்கும் பட்டியல்

| மக்கும் குப்பை | மறுசுழற்சிக்கு பயன்படும் கழிவுகள் |
|---|---|
| மக்கும் குப்பை எனப்படுவது மாநகராட்சி திடக்கழிவுகளில் பொதுவாக காணப்படுவது ஆகும். இவைகளை ஈரக் குப்பைகள் என்றும் அழைக்கலாம். மக்கும் குப்பைகள் எனப்படுபவை மனிதர்கள் பயன்படுத்தும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் கழிவு மூலர்பொருட்கள் ஆகும். இவைகள் மற்ற உயிருள்ள | மறுசுழற்சிக்கு பயன்படும் கழிவுகள் என்பதும் மாநகராட்சி திடக்கழிவுகளில் பொதுவாக காணப்படுபவைகளேயாகும். இவைகளை ஈரமில்லா குப்பைகள் என்றும் அழைக்கலாம். இவைகளை ஏதாவது ஒரு முறையின் மூலம் வேறு பொருளாக மாற்றுவதற்கான மூலப் பொருளாக மாற்றலாம். அவை ஏற்கனவே இருந்த |

| | |
|---|---|
| நுண்ணுயிர்களால் மக்கச் செய்யும் தன்மையுடையவை ஆகும்.<br>1. சமயலறை கழிவுகள் டீ தூள், இலைகள், முட்டை ஓடுகள், பழங்கள், காய்கறி கழிவுகள், போன்றவை<br>2. அசைவ கழிவுகள் அல்லது மாமிச கழிவுகள்<br>3. தோட்டக் கழிவுகள்<br>4. வீட்டு விலங்குகளின் கழிவுகள்<br>5. காகித கழிவுகள்<br>6. தேங்காய் கழிவுகள்<br>7. சாம்பல் | பொருனாகவோ அல்லது அவற்றை ஒத்த வேறு பொருளாகவோ மாற்ற இயலும்.<br>1. செய்திதாள்கள்<br>2. புத்தகங்கள், மற்ற தாள்கள்<br>3. கண்ணாடிகள்<br>4. உலோக பொருட்கள் அல்லது மின் கம்பிகள்(வயர்)<br>5. பிளாஸ்டிக் பொருட்கள்<br>6. பயன்படாத துணிகள்<br>7. பழைய செருப்பு, பெல்ட் போன்ற லெதர் பொருட்கள்<br>8. ரெக்ஷின்<br>9. ரப்பர்<br>10. மரக்கட்டைகள்,உடைந்த மரச்சாமான்கள்<br>11. தெர்மாகூல்அட்டை போன்றவைகள் |

## அட்டவணை– 3

## அபாயகரமான கழிவுகள் பட்டியல்

1. காற்றுடன் கூடிய திரவம் அடைக்கப்படும் கலன்கள்
2. பேட்டரிகள்
3. சமயலறை மற்றும் கழிப்பறை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் அமிலம் கலந்த பொருட்கள் மற்றும் அதன் கலன்கள்.
4. வாகனங்களில் பயன்படுத்தப்படும் பேட்டரிகள், ஆயில் பில்டர் போன்ற வாகன பயன்பாட்டு கழிவுகள்.
5. அமிலங்கள் அவற்றை வாங்கி பயன்படுத்தும் கலன்கள்
6. ஒப்பனைப் பொருட்கள், வேதிப்பொருட்கள் கலந்த பூச்சி மருந்துகள் அவற்றின் கலன்கள்.
7. ஒளி விளங்குகள், குழல் விளக்குகள், மின் காந்த குழல் விளக்குகள்
8. பயன்பாடற்ற மருந்து, மாத்திரைகள் அவற்றின் கலன்கள்
9. பயன்படாத வர்ணங்கள் (பெயிண்ட்) எண்ணெய், பசைத் திரவங்கள் மற்றும் அதன் கலன்கள்
10. பூச்சி மருந்து, களைக்கொல்லி மற்றும் அதன் கலன்கள்
11. ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் அதன் கலன்கள்
12. சாமான்கள் பேக்கிங் செய்ய பயன்படும் பஞ்சு பொருட்கள்

13. தெர்மாமீட்டர் மற்றும் மெர்க்குரி கலன்கள்

14. கணினி, பிரிண்டர், டெலிவிஷன், டிஜிட்டல் கேமிரா, DVD, போன்ற எலக்ட்ரானிக் கழிவுகள்

## அட்டவணை– 4

அபராதக்கட்டணங்களின் அட்டவணை

| வ. எண் | துணைவிதிகளின்படி குறிப்பிட்டுள்ள பொருள் | ஆபராத தொகை ஒவ்வொரு நிகழ்விற்கும் ரூ |
|---|---|---|
| 1. | குப்பைகளை பொது இடங்களிலோ, தனியார் இடங்களிலோ கொட்டுதல், வாகனங்களை சுத்தம் செய்து பொது இடங்களில் கொட்டுதல், கடைகள் மற்றும் வணிக வளாகங்களை சுத்தம் செய்து பொது வெளியில் எரிதல் | 300.00 |
| 2. | இச்சட்டத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளில் குப்பைகளை தரம் பிரிக்காமல் வெளியேற்றுதல்<br>அ). ஒவ்வொரு தனி வீட்டிற்கும்<br>ஆ). தொகுப்பு வீடுகள்/ அடுக்குமாடி குடியிருப்புகள்<br>இ) மொத்த உற்பத்தியாளர்கள் | <br><br>100.00<br>1000.00<br>2000.00 |
| 3. | இச்சட்டத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளில் பிரிக்கப்படாத கட்டிட கழிவுகளை பொது இடங்களில் கொட்டுதல் | 10000.00 |
| 4. | தோட்டக் கழிவுகள் மற்றும் மரக்கழிவுகளை இச்சட்டத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளில் அல்லாமல் வெயியே கொட்டுதல் | 500.00 |
| 5. | குப்பை கழிவுகளை அதற்கென உள்ள இடங்களில் அல்லது அதற்கான சமுதாய குப்பை தொட்டிகளில் அல்லாமல் மற்ற இடங்களில் கொட்டி வைத்தல் | 1000.00 |
| 6. | குப்பைகளை எரித்தல்<br>அ). தனிநபர் இல்லங்களில் அல்லது தனி நபருக்கு சொந்தமான இடங்களில்<br>ஆ).பொது இடங்களில் தனிநபரால்<br>இ). பொது வளாகங்களில் அல்லது பொது நிறுவனங்களில் | <br>200.00<br><br>500.00<br>1000.00 |
| 7. | வியாபார நோக்கில் வெட்டப்படும் ஆடு, மாடு, கோழி, மீன் போன்ற மற்ற மாமிச கழிவுகளை பொது வெளியில் கொட்டுதல் | 1000.00 |
| 8. | நடமாடும் வியாபாரி அல்லது தெருவோர வியாபாரி விற்பனை கழிவுகளை சேகரிக்க தனி கூடை உடன் கொண்டு வராவிட்டால் | 300.00 |
| 9. | நடமாடும் வியாபாரி அல்லது தெருவோர வியாபாரி இத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கழிவுகளை தரம் பிரிக்காமல் கொட்டினால் | 1000.00 |

| | | |
|---|---|---|
| 10. | பொது நிகழ்வுகள் ஒவ்வொன்றின் போதும் அவ்விடங்களை 24 மணிநேரத்திற்குள் சுத்தம் செய்யாத போது. | ஒவ்வொரு நிகழ்வின்போதும் ரூ.1,000 அபராதமாக விதிக்கப்படும். |
| 11 | திடக்கழிவுகளை முறையாக கையாளாமல் டெங்கு, மலேரியா, டைபாயிடு போன்ற இதர தொற்று நோய்களுக்கும் வழிவகுப்போர் மீது நிகழ்வுக்கு தக்கவாறு அபராதம் விதித்தல். | ரூ.1000/– முதல் 100000/– வரை |

**அலுவலகக்குறிப்பு :**

1. திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடங்கிய கட்டளை கொத்து ( ByeLaws) துணை விதிகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஏற்றபடி சில திருத்தம் செய்து மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதங்கள் மற்றும் அபராத கட்டணங்களை 2017–18 நிதி ஆண்டு முதல் வசூல்செய்யவும், துணை விதிகளை மீறும் நபர் மற்றும் செலுத்த தவறும் நிறுவனங்கள் மீது வழக்கு தொடரவும், பொருட்களை பறிமுதல் செய்வதற்கும், கடைகள் மற்றும் நிறுவனங்களை பூட்டி சீல் வைப்பதற்கும் குடிநீர் இணைப்பு துண்டிப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. திடக்கழிவு மேலாண்மை 2016 கட்டளை கொத்து (ByeLaws) தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் இதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2034/2016/எச் 1**

| | | |
|---|---|---|
| | 9) தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியுடன் இணைக்கப்பெற்ற 5 ஊராட்சிப் பகுதிகளான சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், அத்திமரப்பட்டி மற்றும் முத்தையாபுரம் ஆகிய பகுதிகளுக்கும் சேர்த்து குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் 4வது குடிநீர் அபிவிருத்தி திட்டம் (JICA) செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (4டி) எண்.3 (மாந6) நாள் 22/10/2012ல் ஆணை வெளியிட்டுள்ளது.<br>அதன்பேரில் மேற்கண்ட 4வது குடிநீர் திட்டப்பணி (JICA) முடிவடைந்துள்ள நிலையில் ஏற்கனவே இம்மாநகருக்கு வரும் 1வது, 2வது மற்றும் 3வது குடிநீர் மெயின் குழாயினை 4வது குடிநீர் திட்ட 1200 MM MS மெயின் குடிநீர் குழாயுடன், வல்லநாடு தெப்பம் பகுதியில் இணைக்கும் பணியினை ரூ. 12.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2016–17ஆம் ஆண்டு பணியாக மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு | 10) பதிவு செய்யப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/803/2017 | |
| | **10)** 10) தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியுடன் இணைக்கப்பெற்ற 5 ஊராட்சிப் பகுதிகளான சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், அத்திமரப்பட்டி மற்றும் முத்தையாபுரம் ஆகிய பகுதிகளுக்கும் சேர்த்து குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் 4வது குடிநீர் அபிவிருத்தி திட்டம் (JICA) செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (4டி) எண்.3 (மாந6) நாள் 22.10.2012ல் ஆணை வெளியிட்டுள்ளது.<br>அதன்பேரில் மேற்கண்ட 4வது குடிநீர் திட்டப்பணி (JICA) முடிவடைந்துள்ள நிலையில் ஏற்கனவே இம்மாநகருக்கு வரும் 4வது குடிநீர் திட்ட 1200 mm MS மெயின் குடிநீர் குழாயினை, இம்மாநகராட்சி ராஜாஜி பூங்கா தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியுடன் இணைக்கும் பணியினை ரூ. 5.80 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2016–17ஆம் ஆண்டு பணியாக மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/804/2017 | 11)பதிவு செய்யப்படுகிறது |
| | 11) 1.தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அடல் மிஷின் (AMRUT) திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள இந்திய அரசு, தமிழ்நாடு அரசு மான்யம் மற்றும் மாநகராட்சி பங்குத்தொகையுடன் ரூ 216 இலட்சம் தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் லிமிட் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 12)அனுமதிக்கப்படுகிறது |

| திட்டத்தின் பெயர் /திட்டம் எண் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.லட்சத்தில்) | மத்திய அரசு பங்கு தொகை (50 %) (ரூ. லட்சத்தில்) | மாநில அரசின் பங்கு தொகை (20 % ) (ரூ லட்சத்தில்) | மாநகராட்சி பங்கு தொகை (30 %) (ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| பசுமைப் பகுதி மற்றும் பூங்கா<br>AMRUT - II 0022<br>1)எஸ்,கே,எஸ்.ஆர் காலனி பூங்கா | 32,00 | | | |
| **2)**நிகிலேஷன் நகர் பூங்கா | 41.00 | | | |
| **3)**கங்காபரமேஸ்வரி பூங்கா | **97.00** | | | |
| **4)**ராஜகோபால்நகர் பூங்கா | **46.00** | | | |
| மொத்தம் | **216.00** | **108.00** | **43.20** | **64.80** |

**2.**அடல் மிஷன் (AMRUT) வழிகாட்டுதல் படியும், மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்ட அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி திட்டம் செயல்படுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

**3.**தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தால் அனுமதிக்கப்படும் மேற்படி திட்டத்தில் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவன பங்களிப்புடன் பூங்காக்கள் பராமரிப்பு மற்றும் திட்டம் நிறைவேற்றுதலில் மாநகராட்சி நிர்வாகத்தால் எடுக்கப்படும் அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/1059/2017

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி